சென்னைமாவட்டமுதன்மைக் கல்விஅலுவலரின் செயல்முறைகள். சென்னை– 08.

ந.க.எண். 2128/ ஆ2/2022, நாள்.24.03.2022.

| | |
|---|---|
| பொருள் | இளம் மாணவர் விஞ்ஞானி திட்டம் – தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாநில கவுன்சில் மூலமாக தமிழக அரசின் உயர்கல்வித் துறையின் தன்னாட்சி அமைப்பு வாயிலாக திட்டம் செயல்படுத்துதல்– 9 ஆம் வகுப்பு மாணவர்கள் பயன் பெறுதல்– 1 பள்ளிக்கு 2 மாணவர்கள் வீதம் பங்கேற்க கோரப்பட்டது – மாணவர்கள் பெயர் பட்டியல் அனுப்பக் கோருதல்–சார்பு. |
| பார்வை 1 | சென்னை– 25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பமையம் உறுப்பினர் செயலரின் கடிதம் எண். TNSCST/YSSP- 2019-2020 & 2020-2021/MAY – 2022 / VR/2022. நாள்.17.03.2022 ( 2019–2020 Batchl) |

**********

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை– 25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பமையம் உறுப்பினர் செயலரின் கடிதத்தில், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாநிலகவுன்சில் மூலமாக தமிழக அரசின் உயர்கல்வித் துறையின் தன்னாட்சி அமைப்பு வாயிலாக இளம் மாணவ அறிவியலறிஞர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அத்திட்டத்தின்படி 2 தொகுதிகளாக மே– 2022 (கோடைவிடுமுறையில்) நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் சென்னை வருவாய் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்று பயன் பெறவும் அறிவியல் பாடத்தில் மற்றும் ஆராய்ச்சியில் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த அவர்களை ஊக்குவிக்கும் விதமாக சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 9 ஆம் வகுப்பு பயிலும் 2 மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

மே–2022 மாத கோடை விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ள இத்திட்ட நடவடிக்கைகளில் கலந்துக் கொள்ள ஏதுவாக விண்ணப்பிப்பதற்கு இத்துடன் விண்ணப்ப நகல் இணைத்து அனுப்பட்டுகிறது. இதற்கு விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களின் பெயர், பள்ளி முகவரி, இருப்பிட முகவரி, தொலைபேசி எண்.கைப்பேசி எண் போன்றவற்றை சம்பந்தப்பட்ட திட்ட மையத்தில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதல்வருக்கு நேரடியாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம் எனஅறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னைமாவட்டத்தில்உள்ளபள்ளிகளில்பயிலும் மாணவர்களின் பெயர் விவரத்தினைஅனுப்பவேண்டியமுகவரி.

| Sl. No. | Programme Centre & Districts | Co –ordinator and address | Contact details Mail id and Mobile No. |
|---|---|---|---|
| 1 | Loyola College<br>Chennai – 600 034. | Dr. J.JoelGnanadas<br>Assistant Professor<br>Dept. of Plant Biology and Biotechnology<br>Loyola College,<br>Chennai – 600 034. | joelgna@gmail.com<br>Mobile No.9840985870 |

எனவே. விருப்பமும் ஆர்வமும் உள்ள மாணவர்கள் பெயர் விவரத்தினை இணைப்பில் காணும் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து உரிய காலத்திற்குள் அனுப்பிவைத்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இப்பொருள் சார்ந்து ஏதேனும் சந்தேகம் இருப்பின் மேற்காண் பொறுப்பாளரினை தொடர்புகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:விண்ணப்பநகல்

ஒப்பம் xxxxxxx
முதன்மைக் கல்விஅலுவலர்
சென்னை– 08.

பெறுநர்
அனைத்துஅரசு / அரசுஉதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
சென்னைமாவட்டம்.

நகல்

1. சென்னை– 25, தமிழ்நாடுஅறிவியல்மற்றும் தொழில்நுட்பமையம் உறுப்பினர் செயலர் அவர்களுக்குத்தகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது.
2. Dr. J.JoelGnanadas
   Assistant Professor
   Dept. of Plant Biology and Biotechnology
   Loyola College, Chennai – 600 034.தகவலுக்காகஅனுப்பப்படுகிறது.